# பொதுப்பணித் துறை

## மக்கள் சாசனம் – 2022

**1.0. முன்னுரை :**

தமிழ்நாடு பொதுப்பணித் துறையானது 1858 ஆம் ஆண்டு முதல் மூலதன சொத்துக்களை உருவாக்கி சமுதாயத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பழமையான தாய் தொழில்நுட்பத் துறைகளில் ஒன்றாகும். கட்டமைப்புகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் அண்மைக்கால அறிவியல் சார்ந்த, நவீன தொழில்நுட்பம், இந்திய தர நிர்ணயக் கழகம் மற்றும் தேசிய கட்டுமானக் குறியீடுகளின்படி, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசுக் கட்டடங்களான மருத்துவமனைக் கட்டடங்கள், நீதித்துறைக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மாவட்ட ஆட்சியரகம் மற்றும் இதர அரசுக் கட்டடங்களான நினைவகங்கள் மற்றும் நினைவு சின்னங்கள் பொதுப்பணித் துறையின் பொறியியல் திறனுக்கு அழியாச் சான்றாகத் திகழ்கின்றன.

கட்டுமானப் பொருட்கள், தொழில்நுட்பம் மற்றும் கட்டுமானத்தில் புதிய செயல்பாடுகளை கொண்டு வருவதில் தொடர்ந்து முயற்சி செய்தல் மற்றும் வலுவான மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதன் மூலம் மாநிலத்தின் நிலையான வளர்ச்சிக்கு வழிவகுப்பதுடன் தேசிய பொருளாதார வளர்ச்சியில் பொதுப்பணித் துறை பெரும் பங்கு வகிக்கிறது.

**2.0. துறையின் நோக்கங்கள்**

பின்வரும் பணிகளை மேற்கொள்ள அயராது உழைப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

- அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப மூலதன சொத்துக்களை உருவாக்குதல்.
- அரசின் சொத்துக்களான கட்டடங்களை பராமரித்தல்.

- கட்டுமான தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடடைதல்.

- வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க பாரம்பரிய கட்டடங்கள், நினைவகங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை புதுப்பித்தல், புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல்.

- முக்கிய பிரமுகர்களின் வருகைகள் மற்றும் அரசாங்க நிகழ்ச்சிகள் தொடர்பான ஏற்பாடுகளை பாதுக்காப்புடன் செய்தல்.

## 3.0. துறையின் செயல்பாடுகள்

அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகள், நீதிமன்றக் கட்டடங்கள், மாவட்ட ஆட்சியரகங்கள், பள்ளிகள், விடுதிக் கட்டடங்கள் மற்றும் பிற அரசுத் துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பின்வரும் பணிகள் இத்துறையினால் செயலாக்கப்பட்டு வருகின்றன :–

- சென்னையிலுள்ள தலைமைச் செயலகக் கட்டடத்தினை பராமரித்தல்.

- சென்னை மற்றும் உதகமண்டலத்திலுள்ள மாண்புமிகு ஆளுநர் மாளிகைக் கட்டடங்களைப் பராமரித்தல்.

- மாண்புமிகு நீதியரசர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மிக மிக முக்கியப் பிரமுகர்களுக்கான மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள் மற்றும் பிற அரசுக் கட்டடங்களைப் பராமரித்தல்.

- ஜப்பான் நிதியுதவி திட்டங்கள் (JICA) மூலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் திட்டங்களை செயல்படுத்துதல்.

- பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- மிக முக்கிய பிரமுகர்கள் மற்றும் மிக மிக முக்கிய பிரமுகர்கள் வருகையின் போது மேடை அமைப்பு, பாதுகாப்பு அரண்கள், ஒலி ஒளி அமைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இவ்வமைப்புகளுக்கு உறுதித்தன்மைச் சான்று அளித்தல்.

- நீதித்துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிடமிருந்து பெறப்படும் வேண்டுகோளின்படி, கட்டடங்களை மதிப்பிடுதல்.

- அரசு, நீதித்துறை மற்றும் காவல் துறை ஆணையர் பரிந்துரையின் அடிப்படையில் திரையரங்குகள், கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் இதரக் கட்டடங்களுக்கு கட்டட உறுதித்தன்மைச் சான்று வழங்குதல்.

- அரசு அலுவலகங்கள் இயங்கி வரும் தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்று வழங்குதல்.

- ஒவ்வொரு ஆண்டும் செந்தர விலை விகிதப் பட்டியல், கட்டட தளப்பரப்பு விலைவிகிதப் பட்டியல் மற்றும் வாடகை மதிப்பீட்டினைக் கணக்கிடுவதற்கான கட்டடத் தளப்பரப்பு விலைவிகிதப் பட்டியல் திருத்தி அமைத்தல்.


- மதிப்பீட்டுக் குழு மூலம் கட்டுமானப் பொருட்கள் / கட்டுமானத் தொழில் நுட்பங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.

- கட்டுமானப் பொருட்கள் மற்றும் நடைமுறைகளை ஆராய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

- பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் இருந்து வரும் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவுத்திறனை மேம்படுத்த தொழில் நுட்ப வழிக்காட்டல் / பயிற்சி அளித்தல்.

## 4.0. பொதுப்பணித்துறையின் அமைப்பு :

**பொதுப்பணித் துறை அமைப்பு விளக்கப்படம்**




## 5.0. அரசுத் துறைகளுக்கான சேவைகள் :

பொதுப்பணித்துறையின் சேவைகளின் மூலம் பின்வரும் அரசுத் துறைகள் பயன் பெறுகின்றன:–

- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
- பள்ளிக் கல்வித் துறை
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
- உள்துறை (நீதிமன்றம்)
- போக்குவரத்துத் துறை
- வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை
- பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
- வணிகவரி மற்றும் பதிவுத் துறை

- கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை
- தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
- சட்டத் துறை
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
- சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை
- நிதித்துறை (சம்பளக் கணக்கு அலுவலகங்கள் மற்றும் கருவூலங்கள்)
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை
- தொழில் துறை
- சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை
- மாற்றுத் திறனாளிகள் நலத்துறை
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## 5.1. கட்டடப் பணிகளைத் துவங்குவதற்கான நடைமுறைகள் :

அரசுத் துறைகளிடமிருந்து, புதிய கட்டடங்களை உருவாக்குவதற்காக பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில் முதனிலை வரைபடங்கள் மற்றும் தோராய திட்ட மதிப்பீடு ஆகியவை தயாரிக்கப்பட்டு, தொடர்புடைய துறைத் தலைவர்களுக்கு அரசின் நிர்வாக ஒப்பளிப்பு பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. அரசின் நிர்வாக ஒப்பளிப்பு பெறப்பட்டபின், விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முகமை இறுதி செய்யப்பட்டப் பின்னர் கட்டுமானப் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 6.0. பொதுப்பணித்துறையினால் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நடவடிக்கை :

இத்துறை ஒப்பந்தப்புள்ளிகளை விளம்பரப்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் இறுதி செய்து பதிவு செய்துள்ள பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்களுக்கு கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு கட்டடப் பணிகளை வழங்குவதில், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள், 2000 ஆகியவற்றை பின்பற்றி வருகிறது.

## 6.1. பொதுப்பணித்துறையில் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதற்கான விதிமுறைகள்

அரசுப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதற்கான விதிமுறைகள் தமிழ்நாடு பொதுப்பணித்துறை விதித் தொகுப்பின் பிற்சேர்க்கை–XXIIIல் இடம் பெற்றுள்ளன. அரசு ஆணை (நிலை) எண்.195, பொதுப்பணித் (ஜி2) துறை, நாள் 14.12.2021–இன்படி ஒற்றைச் சாளர முறையில் அனைத்து வகைப்பாடுகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் பதிவு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5 மற்றும் மண்டல தலைமைப் பொறியாளர்கள், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

**ஒப்பந்தக்காரர்கள் வகைப்பாடு :**

அரசாணை(நிலை)எண்.37, பொதுப்பணி(ஜி2)த்துறை, நாள்.17.06.2022இல் ஒப்பந்தக்காரர்களின் வகைப்பாட்டில் I–A என்ற புதிய வகைப்பாடு சேர்ப்பதற்கும், ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதற்கான வகைப்பாடுகளுக்கான நிதி வரம்பினை திருத்தியமைப்பதற்கும் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பதிவுகளுக்கான கடன் தீர்வுத் திறச் சான்றிதழுக்கான (Solvency Certificate) விழுக்காடு மதிப்பை நிர்ணயம் செய்வதற்கும் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண். | வகுப்பு | திருத்திய பண வரம்பு (Monetary Limit) | திருத்திய கடன் தீர்வுத் திறனுக்கான தொகை (Solvency Amount) |
|---|---|---|---|
| 1. | வகைப்பாடு I A | ரூ.25.00 கோடிக்கு மேல் | ரூ.2.50 கோடி |
| 2. | வகைப்பாடு I | ரூ.10.00 கோடிக்கு மேல் மற்றும் ரூ.25.00 கோடி வரை | ரூ.1.50 கோடி |
| 3. | வகைப்பாடு II | ரூ.5.00 கோடிக்கு மேல் மற்றும் ரூ.10.00 கோடி வரை | ரூ.75.00 இலட்சம் |
| 4. | வகைப்பாடு III | ரூ.2.00 கோடிக்கு மேல் மற்றும் ரூ.5.00 கோடி வரை | ரூ.30.00 இலட்சம் |
| 5. | வகைப்பாடு IV | ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.2.00 கோடி வரை | ரூ.10.00 இலட்சம்* |
| 6. | வகைப்பாடு V | ரூ.50.00 இலட்சம் வரை | பதிவு மதிப்பில் 15 விழுக்காடு** |

* வகைப்பாடு–IV ஒப்பந்தக்காரர்களை பொறுத்தவரையில், கடன் தீர்வு திறச் சான்றிதழுக்கான தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு பதிலாக ரூ.10.00 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

** வகைப்பாடு–V ஒப்பந்தக்காரர்களை பொறுத்தவரையில், அதாவது ரூ.50.00 இலட்சம் வரை ஒப்பந்தக்காரர் எவ்வளவு மதிப்பிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கின்றாரோ அம்மதிப்பிற்கு கடன் தீர்வு திறச் சான்றிதழ் மதிப்பு 15 விழுக்காடு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு ஒப்பந்தக்காரர் வகைப்பாடு–V–இன் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பிற்கு பதிவு செய்வதற்கு விண்ணப்பம் சமர்ப்பித்தால் அம்மதிப்பில் 15 விழுக்காடு கடன் தீர்வு திறச் சான்றிதழ் மதிப்பு ரூ.3.00 இலட்சம் என கணக்கிடப்படும்.

**விண்ணப்பக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| கோட்ட அளவில் | : | ரூ.1000+சரக்கு மற்றும் சேவை வரி |
| வட்ட அளவில் | : | ரூ.1000+சரக்கு மற்றும் சேவை வரி |
| மாநில அளவில் | : | ரூ.5000+சரக்கு மற்றும் சேவை வரி |

**பதிவுக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| கோட்ட அளவில் | : | ரூ.10,000/– |
| வட்ட அளவில் | : | ரூ.20,000/– |
| மாநில அளவில் | : | ரூ.50,000/– |

**ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்வதற்குரிய இன்றியமையாத தகுதிகள்**

- வருமானவரித் துறையில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி விபரஅறிக்கை மற்றும் நிரந்தர கணக்கு எண் (Permanent Account Number).
- சரக்கு மற்றும் சேவைவரி எண் (Goods and Services Tax Identification Number)
- ஒப்பந்தக்காரர், தேர்ந்தெடுக்கும் வகைப்பாட்டின் 30 சதவீதத்திற்குக் குறையாத வகையில் வருவாய்த் துறை வழங்கும் அசையாச் சொத்துக்களுக்கான சொத்து மதிப்புச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்ய விரும்பும் தனி நபர் பெயரிலோ அல்லது நிறுவனமாக இருப்பின் பங்குதாரருடைய பெயரிலோ சொத்து மதிப்புச் சான்றிதழ் மற்றும் சமீபத்திய தணிக்கையாளர் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும்.
- பணிகளை மேற்கொள்வதற்கான நிதி சார்ந்த தகுதியினை அறிய, ஒப்பந்தக்காரர் கடந்த ஒரு வருடத்தில் வங்கியில் மேற்கொண்ட பணப் பரிமாற்றம் குறித்த சான்றிதழ்.
- கட்டட கட்டுமானப் பணிகளில் முன்அனுபவம்.

- ஒப்பந்தக்காரரிடம் உள்ள கருவிகள் மற்றும் தளவாடங்கள் பற்றிய விவரங்கள்.
- ஒப்பந்தக்காரரிடம் உள்ள பணிகளை மேற்பார்வை செய்வதற்கான தொழில்நுட்பப் பணியாளர்களின் விவரங்கள்.

சொத்து மதிப்புச் சான்றிதழ், முன்அனுபவம் மற்றும் கடந்த கால செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அடுத்த வகைப்பாட்டிற்கு உயர்த்துவது நிர்ணயிக்கப்படும்.

**பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய கணக்குத் தலைப்பு**

0059.பொதுப்பணி – 80. பொது – 800. ஏனைய வரவுகள் – AC. பலவகை – 233. தொழில் முறை சிறப்பு கட்டணங்கள் – 09. பொதுப்பணி – கட்டடங்கள் (DPC.0059–80–800–AC–23309)

**விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள்**

மேற்குறிப்பிட்ட சேவையைப் பெற விரும்புவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அதனுடன் தேவைப்படும் மதிப்பிற்கான சொத்து மதிப்புச் சான்றிதழ், வில்லங்க சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வருமானவரி அறிக்கை தாக்கல் செய்ததற்கான ஆதாரங்கள், விற்பனைவரி பதிவுச் சான்றிதழ், நிதித் திறன் குறித்த ஆதார விவரங்கள், அவர்களிடமுள்ள பணியாளர் திறன் மற்றும் இயந்திரங்களின் விவரங்கள் தொடர்பான மூல ஆவணங்களை கண்காணிப்புப் பொறியாளரிடம் அல்லது செயற்பொறியாளரிடம் உண்மைத் தன்மையைச் சரிபார்த்திட சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பங்களை நிராகரித்தல்**

விண்ணப்பத்தைப் பதிவு செய்யும் அதிகாரம் உள்ளவருக்கு, பதிவு செய்வதற்காகப் பெறப்பட்ட எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிராகரிக்கும் நிலையில், நிராகரிப்புக்கான காரணங்களைச் சுருக்கமாகத் தெரிவித்து விண்ணப்பதாரருக்கு காரணம் கேட்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டும். (தேவைப்படும் சொத்து மதிப்புச் சான்றிதழ், வில்லங்க சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமல் இருந்தால் நிராகரிக்கப்படலாம்)

**வகைப்பாட்டில் இறக்கம்**

பதிவு செய்யும் அலுவலர், ஒப்பந்தக்காரரை வகைப்பாடு இறக்கம் செய்யலாம். அவ்வாறு வகைப்பாடு இறக்கம் செய்தாலும் ஒப்பந்தக்காரரின் விளக்கத்தைப் பெற்று தகுதியின் அடிப்படையில், அவரை மீண்டும் அதே வகைப்பாட்டில் பதிவு செய்யவும் கருதலாம்.

**எளிதான மற்றும் பாரபட்சமற்ற அணுகுமுறை**

அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் பாரபட்சமின்றி செயல்படவேண்டும்.

**6.2. ஒப்பந்தப்புள்ளி அட்டவணை வழங்குவதற்கான நடைமுறைகள் :–**

**தகவல்**

ஒப்பந்த அடிப்படையில் இத்துறையில் கட்டடம் கட்டும் பணி அல்லது பராமரிப்புப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்குத் தேவையான ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் கோருபவர்களுக்கு வழங்குவார்.

**சேவையின் தரம்**

பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவை குறித்த விபரங்கள் பின்வரும் வழிகளில் தெரிவிக்கப்படும் :–

அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களிலும், குறிப்பிட்ட அரசு இணையதளத்தின் மூலமும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரம் செய்யப்படுகிறது.

- சென்னை, தலைமைச் செயலகம், மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வெளியிடும் வாராந்திர ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் அல்லது அந்தந்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் வாரத்திற்கு இருமுறை வெளியிடும் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பணியின் மதிப்பைப் பொறுத்து ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வெளியிடப்படுகிறது.
- ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அந்தந்த பொதுப்பணித்துறை அலுவலகங்களில் உள்ள தகவல் பலகையிலும் காட்சிக்கு வைக்கப்படும்.
- பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு, அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட சுய முகவரியிட்ட உறையில் தபால் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்படும்.

**தேர்வு செய்தல் மற்றும் கலந்தறிதல்**

இச்சேவையைப் பற்றிய விவரங்களை ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரும் அலுவலரிடம் பெறலாம்.

**ஒப்பந்தப்புள்ளி குறித்த குறைபாடுகள் தீர்வு**

அந்தந்த ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரும் அலுவலரைத் தொடர்பு கொள்வதன் மூலம் குறைகளைத் தீர்வு செய்யலாம்.

**விலை மதிப்பு**

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை பற்றிய தகவல் கிடைத்தவுடன், ஒப்பந்தக்காரர் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறுவதற்காக எழுத்துமூலம் வேண்டுகோள் அளிப்பதுடன், உரிய தொகையினை வங்கி செலுத்து சீட்டு / கேட்பு காசோலை மூலம் செலுத்த வேண்டும். அவ்வாறு வேண்டுகோள் கடிதம் உரிய கட்டணத்துடன் பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

மேற்கொள்ளப்படவுள்ள பணியின் மதிப்பின் அடிப்படையில், செலுத்தவேண்டிய தொகை மற்றும் செலுத்தும் வழிமுறை பற்றி ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையிலேயே குறிப்பிடப்படும்.

அரசாணை(நிலை)எண்.91, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 23.03.2010ன்படி, ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை அரசின் இணையதளத்தில் (https://tntenders.gov.in )இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அழைப்பு**

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள், 2000 விதி 20ன்படி, ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிப்பதற்குப் போதிய காலம் அளிக்கப்பட்டுள்ளது எனவும், செய்தித் தாள்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இதழ் ஆகியவற்றில் விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளுக்கும் இடையே உள்ள குறைந்த பட்ச காலம் அனுமதித்தல் குறித்து ஒப்பந்தங்கள் வரவேற்கும் அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். குறைந்தபட்ச கால அளவு பின்வருமாறு:–

- ரூ.2.00 கோடி வரை மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 15 நாட்கள்
- ரூ.2.00 கோடிக்கு மேல் மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 30 நாட்கள்

## 6.3. ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதற்கான கால அளவு

அரசாணை (நிலை) எண். 873, பொதுப்பணித் துறை, நாள் 04.05.1982 மற்றும் அரசாணை (நிலை) எண். 49, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 11.09.1998ன்படி, ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கும் அதிகாரிக்குச் சமர்ப்பிக்க பின்பற்ற வேண்டிய கால அளவு விவரங்கள் பின்வருமாறு :–

- ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் ஒப்பந்தப்புள்ளி கருத்துருக்களை ஆய்வு செய்து கண்காணிப்புப் பொறியாளர், தலைமைப் பொறியாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

- கண்காணிப்புப் பொறியாளரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கருத்துருக்கள் பெறப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அவற்றை ஆய்வு செய்து, தலைமைப் பொறியாளர் ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் அளிக்கும் குழுவின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

- ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் அளிக்கும் குழு ஒரு மாத காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி வழங்குவது பற்றிய முடிவினை எடுக்க வேண்டும்.

## 6.4. பணிகளைச் செயல்படுத்துவதற்கான கால அளவு :–

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கடித எண். தவஅ (அ) / 24179 / 2002–1, நாள் 22.04.2002ல் உள்ள வழிகாட்டுதல்களின்படி, கட்டடப் பணிகளை செயலாற்றுவதற்கான கால அளவு (ஒப்பந்தக்காரருக்கு பணித்தளம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து பணி முடியும் நாள் வரை) பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கட்டடத்தின் வகைப்பாடு | மொத்த தளப்பரப்புக்கு உரிய கட்டுமான காலம் (மாதங்களில்) | | |
|---|---|---|---|---|
| | | 500 சதுர மீட்டர் வரை | 501 சதுர மீட்டர் முதல் 1000 சதுர மீட்டர் வரை | 1001 சதுர மீட்டர் முதல் 2500 சதுர மீட்டர் வரை |
| 1 | ஒருதளம், சுவர் கட்டுமானங்கள் | 4 | 7 | 10 |
| 2 | ஒருதளம், தூண் அமைப்புக் கட்டுமானங்கள் | 5 | 9 | 12 |
| | கூடுதலான அடுக்குமாடி (இரு வகைகளுக்கும்) கூடுதல் காலம் – 1.5 மாதங்கள் | | | |

எனினும், மேற்படி கால அளவுகளை, தற்செயலான எதிர்பாராச் சூழ்நிலைகளின் காரணமாக உயர் அலுவலர்களின் ஒப்புதலோடு மட்டுமே மாறுதல் செய்யலாம்.

2500 சதுர மீட்டருக்கும் அதிகமாக மொத்தத் தளப்பரப்பு கொண்ட (சிறப்பு வகை) கட்டடங்களுக்கான கால அளவு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் ஒப்புதலோடு முடிவு செய்யப்பட வேண்டும்.

### 6.5. ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகும் காலம்

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதி 2000–ன்படி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் முதல் 90 நாட்கள் வரை செல்லுபடியாகும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைக்கும் அதிகாரிக்கு 180 நாட்களுக்கு மிகாமல் நீட்டிப்பு பெறுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**7.0. பிற சேவைகள்:**

**7.1. புதிய திரையரங்குகளுக்கான உறுதித் தன்மைச் சான்று வழங்குதல் :–**

அரசாணை (நிலை) எண்.972, பொதுப்பணித்துறை, நாள் 13.07.1992 மற்றும் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ன் அடிப்படையில், திரையரங்குகளுக்கான வரைபடங்களின் ஒப்புதல் மற்றும் பரிந்துரையுடன், கட்டட உறுதித்தன்மைச் சான்றினை உரிமம் வழங்கும் அலுவலருக்கு அனுப்பும் பணியை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் மேற்கொள்கிறது.

புதிய திரையரங்குகளுக்கான உறுதித் தன்மைச் சான்று வழங்குவதற்கான கோரிக்கை சென்னையில் உள்ள காவல் ஆணையர் மற்றும் இதர மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகிய உரிமம் வழங்கும் அலுவலர்களிடமிருந்து பெறப்படுகின்றன.

அவ்வாறு கோரிக்கைகள் பெறப்பட்டபின், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் அவர்கள் புதிய திரையரங்குகள் / பேரங்காடிகளுடன் கூடிய அடுக்குமாடித் திரையரங்குகளுக்கான கட்டுமானம் துவங்குவதற்கு முன் தள ஆய்வு மேற்கொண்டு முதற்கட்ட கருத்துருக்களையும் மற்றும் கட்டுமானப் பணி முடிந்தபின் உள்ள முடிவுற்ற வரைபடங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து வரைபடப் பரிந்துரையுடன் பொதுப்பணித்துறை வழங்கும் கட்டட உறுதித் தன்மைச் சான்றினையும் உரிய உரிமம் வழங்கும் அலுவலருக்கு அனுப்பி வைப்பார். விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

**பழைய திரையரங்குக் கட்டடங்களுக்கு உறுதித்தன்மை சான்று வழங்குதல்:–**

(அ) 50 ஆண்டுகளுக்கு மேலான பழைய திரையரங்குக் கட்டடங்களுக்கு நேரடி தள ஆய்வுக்குப் பிறகு கட்டட உறுதித்தன்மை சான்று கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை அவர்களால் வழங்கப்படும். விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

(ஆ) 50 ஆண்டுகளுக்கு குறைந்த பழைய திரையரங்குக் கட்டடங்களுக்கு கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை அவர்களின் முன் அனுமதி பெற்று, உரிய கோட்ட அலுவலரின் நேரடி தள ஆய்வுக்குப் பிறகு கட்டட உறுதித் தன்மைச் சான்று வழங்கப்படும்.

அரசாணை நிலை எண். 1283, உள் (திரையரங்குகள்–2) துறை, நாள்.23.08.1993 மற்றும் அரசாணை (நிலை) எண். 181, பொதுப்பணி (ஜி2) துறை, நாள் 16.05.2003 மற்றும் தமிழ்நாடு சிவில் மற்றும் குற்றவியில் நீதிமன்ற கையேட்டின்படி திரையரங்குகளுக்கான உறுதித் தன்மைச் சான்று வழங்குவதற்கான கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**7.2. தனியார் பொறியாளர்களை மாவட்ட பொறியாளர்கள் பட்டியலில் சேர்ப்பதற்காக பொதுப்பணித்துறை** பொறியாளர் குழுமம் ஒப்புதல் வழங்குதல்:

தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) சட்டம், 1965 மற்றும் தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) விதிகள், 1966இன் படி, பள்ளிகள், கல்லூரிகள், கல்யாண மண்டபங்கள், சினிமா தியேட்டர் மற்றும் மால்கள் போன்ற பொது கட்டடங்கள் என எந்த ஒரு கட்டடத்திற்கும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் பராமரிக்கப்படும் தனியார் பொறியாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள பொறியாளர்களிடம் மட்டுமே கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழைப் பெற வேண்டும்.

அரசாணை (நிலை)எண்.43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.02.2011இன்படி தகுதி அடிப்படையில் தனியார் பொறியாளர்கள் மூன்று வகுப்புகளின் (IA, I, II) கீழ் பதிவு செய்யப்படலாம்.

தனியார் பொறியாளர் பட்டியலில் சேர்வதற்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். ஆட்சியர், சம்பந்தப்பட்ட அதிகார வரம்பில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை உரிய படிவத்தில் பரிந்துரை பெற்று விண்ணப்பத்தை

முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் அவர்கள் மூலம் பொறியாளர் குழு பொதுப்பணித்துறை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.

விண்ணப்பதாரர் முதல் மாவட்டமாக தனியார் பொறியாளராக கோரியிருந்தால், 30 நாட்களுக்குள் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை, முதன்மை தலைமைப் பொறியாளரிடமிருந்து விண்ணப்பத்தைப் பெற்று பின் நேர்காணல் நடத்தப்பட்டு பொறியாளர் குழு பொதுப்பணித்துறை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.
விண்ணப்பதாரர் அடுத்தடுத்த (2வது மாவட்டம் மற்றும் பல) கோரியிருந்தால், விண்ணப்பம் பொறியாளர் குழுவிடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். ஒப்புதலின் பேரில், மாவட்ட அரசிதழில் வெளியிட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்படும்.

**7.3. (அ) கட்டுமானப் பொருட்கள் / கட்டுமான தொழில்நுட்ப ஒப்புதல் மதிப்பீட்டுக் குழு**

அரசாணை (நிலை) எண்.106, வீட்டுவசதித் துறை, நாள் 06.03.1975ன்படி புதிய கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தை மதிப்பிட்டு அறிமுகப்படுத்துவதற்காக பல்துறை வல்லுநர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழு அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டது.

இம்மதிப்பீட்டுக் குழுவிற்கு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது), தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள் தலைவராகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் அவர்கள் உறுப்பினர் செயலராகவும், அண்ணா பல்கலைக் கழகம், இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), இந்திய தரநிர்ணய அமைவனம் (BIS), கட்டட அமைப்பு பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (SERC), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம், இராணுவ பொறியியல் துறை, பொதுப்பணித்துறை தலைமைக் கட்டடக் கலைஞர், பொறியாளர்கள் கழகம் மற்றும் கட்டுமானவியலாளர் சங்கம் ஆகிய

துறைகள் / நிறுவனங்கள் சார்ந்த வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

கட்டுமானப் பொருள் உற்பத்தியாளர்களிடமிருந்து ஒப்புதலுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டபின், ஒரு ஆண்டில் குறைந்த அளவு நான்கு மதிப்பீட்டுக் குழுவின் கூட்டங்கள் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் மற்றும் தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையத்தால் நடத்தப்படுகிறது.

**கட்டுமாணப் பொருட்கள் ஒப்புதலுக்குத் தேவையான விவரங்கள்**

கட்டுமானப் பொருள் உற்பத்தியாளர் ஒப்புதலுக்கான விண்ணப்பத்துடன் பின்வரும் விவரங்கள் அடங்கிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :

- உற்பத்தி செய்யும் நிறுவனம் தொடர்பான பொது விவரங்கள், உற்பத்தி மற்றும் விற்பனைக்கான வசதிகள்.
- இந்திய தர நிர்ணய கழகத்தின் உரிமம் / ISO சான்றிதழ்கள்
- அரசு / இந்திய தர நிர்ணய கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வேறுபட்ட தனியார் ஆய்வகங்களிலிருந்து பெறப்பட்ட பொருட்களின் ஆய்வு அறிக்கைகள்
- பொருட்களின் தொழில் நுட்பக்குறிப்புகள்
- ஏற்கெனவே பெறப்பட்ட ஒப்புதல்கள் / செயல்திறன் சான்றுகள் / கொள்முதல் ஆணைகள்
- கட்டுமானத்தில் பொருட்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்
- விலை விவரப் பட்டியல்
- துறையால் கேட்கப்படும் ஏனைய விவரங்கள்

மேற்கண்ட விவரங்களுடன் ஒப்புதல் கோரப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் ரூ.10,000/– வீதம் மதிப்பீட்டுக் கட்டணத்தினை, செயற்பொறியாளர், தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்களுக்கு கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும்.

**கட்டுமானப் பொருள் ஒப்புதல் சான்று வழங்குவதற்கான அடிப்படை**

மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டுக்குழு கட்டுமானப் பொருட்களின் உற்பத்திக்கான இந்திய தர நிர்ணயக் கழகத்தின் உரிமம் மற்றும் மத்திய / மாநில அரசு ஆய்வகங்கள் மற்றும் இந்திய தர நிர்ணயக் கழக ஒப்புதல் பெற்ற தனியார் ஆய்வகங்களின் பரிசோதனை அறிக்கைகள் அடிப்படையில் கட்டுமானப் பொருட்களின் தர ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

**(ஆ) கற்காரை மற்றும் பூச்சுவேலைக்கான நொறுக்கப்பட்ட கல்மண**லுக்கான **(எம் சாண்ட்) ஒப்புதல்**

நொறுக்கப்பட்ட கல்மணலுக்கு பொதுப்பணித்துறையால் வழங்கப்படும் பொருள் ஒப்புதல் சான்றிதழ் கீழ்கண்ட வழிமுறை மூலம் வழங்கப்படுகிறது. (i) நொறுக்கப்பட்ட கல்மணல் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் கல்குவாரி ஆகியவைகளின், சட்டப்படியான ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பித்தல், (ii) பொதுப்பணித்துறை அதிகாரிகளால் நொறுக்கப்பட்ட கல்மணல் தயாரிக்கும் நிறுவனங்களை ஆய்வு செய்து, நொறுக்கப்பட்ட கல்மணலின் மாதிரிகள் ஆய்விற்காக எடுத்தல் (iii) ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் ரூ.10,000/– வீதம் மதிப்பீட்டு கட்டணம் கட்டுதல், (iv) மதிப்பீட்டு குழு கூட்டம் கூட்டுதல், (v) ஒப்புதல் மற்றும் சான்றிதழ் வழங்குதல்.

கட்டுமானப் பொருள் ஒப்புதல் சான்றிதழ், கட்டுமானக் குழு கூட்ட நடவடிக்கை ஒப்புதல் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் குழுவின் உறுப்பினர் செயலர் அவர்களால் வழங்கப்படுகிறது. இந்த சான்றிதழ் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கது. செல்லுபடிக் காலம் முடிவுற்ற பின்னர் ஒரு பொருளுக்கு ரூ.5,000/– வீதம் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தி பொருட்களுக்கான ஒப்புதல் சான்றிதழை புதுப்பித்துக் கொள்ளலாம்.

## 7.4. தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் ஆய்வகப் பரிசோதனைகள் :

சென்னையில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையப் பரிசோதனைக் கூடத்தில், சிமெண்ட், இரும்பு, மணல், ஜல்லி, செங்கல் மற்றும் கற்காரையின் மீதான தரப்பரிசோதனைகள், இந்திய தர நிர்ணயக் கழகத்தின் தரநிர்ணய விதிகளின்படி, அரசு ஆணை (நிலை) எண்.97, பொதுப்பணித் (ஜி1) துறை, நாள் 03.06.2011 மற்றும் அரசாணை (நிலை) எண்.181, பொதுப்பணி(ஜி2)துறை, நாள் 16.05.2003ல் குறிப்பிட்டுள்ள கட்டணம் செலுத்துவதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. பொருட்களின் மாதிரிகள் பெறப்பட்ட 7 நாட்களுக்குள் தரப்பரிசோதனை செய்யப்பட்டு, முடிந்த பின்னர் 3 நாட்களுக்குள் ஆய்வறிக்கை வழங்கப்படுகிறது.

## 7.5. தனியார் கட்டடங்களுக்கான நியாய வாடகைச் சான்றிதழ் வழங்குதல் :

பல்வேறு அரசு அலுவலகங்கள் இயங்கிவரும் தனியார் கட்டடங்களுக்கு இத்துறையால் நியாய வாடகைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மாநகராட்சி எல்லைக்குள் 1000 சதுர அடி வரை கட்டடத் தளப்பரப்பு உள்ள தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்றிதழ் வழங்க செயற்பொறியாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் கட்டடத் தளப்பரப்பு உள்ள கட்டடங்களுக்கு கண்காணிப்புப் பொறியாளரால் நியாய வாடகைச் சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பம் பெறப்பட்ட 15 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

## 7.6. பொதுக் கூட்ட மேடைகளுக்கு உறுதித்தன்மைச் சான்றிதழ் வழங்குதல் :

மிக மிக முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தினை ஏற்பாடு செய்பவர்கள் பொதுக்கூட்ட மேடையின் உறுதித்தன்மைச் சான்றிதழை சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இச்சான்று கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக வழங்கப்படும்.

## 7.7. பொதுக் கட்டடங்களின் உறுதித் தன்மை குறித்து சான்றிதழ் வழங்குதல் :

தனியார் பள்ளிக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், திரையரங்குகள் முதலிய கட்டடங்களின் உரிமையாளர்கள் அவர்களது கட்டடங்களின் உறுதித்தன்மை குறித்த சான்றிதழைப் பெற, பொதுப்பணித்துறை கட்டட

அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளரிடம் விண்ணப்பம் செய்து இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். சேவைப் பயன் கட்டணம் (Centage charges) செலுத்துவதன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் சான்றிதழ் வழங்கப்படும்.

## 7.8. வைப்புத் தொகைப் பணிகள் :

அரசு சார்ந்த, தனியார் துறை, கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழிற்சாலை முதலியவற்றின் கோரிக்கை அடிப்படையில் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்படும். இதற்காக அரசாணை(நிலை)எண்.181, பொதுப்பணித்(ஜி2)துறை, நாள்.16.05.2003ல் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட சதவீதத்தின்படி, சேவைப் பயன் கட்டணம் (Centage Charges) பெற்றுக் கொள்ளப்படும்.

## 7.9. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன்படி தகவல்கள் வழங்குதல்:

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்களை பெற விண்ணப்பம் செய்வோர் தங்கள் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலர்களை அணுகலாம். **"பொதுத் தகவல் அலுவலர்கள்"** மற்றும் **"மேல்முறையீட்டு அலுவலர்கள்"** குறித்த பட்டியல் பிற்சேர்க்கை–II–ல் அளிக்கப்பட்டுள்ளது.

**எ. வ. வேலு**
**பொதுப்பணித்துறை அமைச்சர்**

**பிற்சேர்க்கை–I**

**பொதுப்பணித்துறை அலுவலர்களின் விவரங்கள்**
**தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள்**

| வ. எண் | அலுவலர்களின் விவரங்கள் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1. | முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர் சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை–5 | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–600 005 | 044–28525367 |
| 2. | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி | கண்டோன்மண்ட், திருச்சிராப்பள்ளி – 620 001 | 0431–2418722 |
| 3. | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), கோயமுத்தூர் மண்டலம், கோயமுத்தூர். | கோயமுத்தூர் மண்டலம், கோயமுத்தூர். | 0422–2992620 |
| 4. | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை, | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002 | 0452 – 2530862 |
| 5. | இணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர் சென்னை மண்டலம் அலுவலகம் , பொதுப்பணித்துறை, சென்னை–5 | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–600 005 | 044–28413725<br>044–28410402<br>Ext. 152 |
| 6. | துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), (ஒருங்கிணைப்பு அதிகாரி, முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் மற்றும் பொது தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டம்), | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–600 005 | 044–28410402<br>Ext. 161 |

| வ. எண் | அலுவலர்களின் விவரங்கள் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
